**உள்ளடக்கம்**


| தொடர் இல | விடயம் | பக்க இலக்கம் |
|---|---|---|
| 01 | அறிமுகம் | 01 |
| 02 | ஆணைக்குழு கூட்டங்கள் | 01 |
| 03 | அரசாங்க சேவை ஆணைக்குழுவின்பிரிவுகளின் செயற்பாடுகள் | 01 |
| | • தாபனப் பிரிவு | 01 |
| | • நியமனப் பிரிவு | 03 |
| | • பதவி உயர்வுப் பிரிவு | 04 |
| | • ஒழுக்காற்றுப் பிரிவு | 06 |
| | • மேன்முறையீட்டுப் பிரிவு | 09 |
| | • கல்விச் சேவைக்குழு | 10 |
| | • சுகாதார சேவைக்குழு | 12 |
| 04 | அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயற்பாடுகளை மேலும் வினைத்திறனாக்குவதற்கு முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள் | 13 |
| 05 | அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுடனான கூட்டங்கள் | 15 |
| 06 | பொதுமனுக்குழுவில் ஆஜராகுதல் | 16 |
| 07 | அரசாங்கத்திற்கு எதிராக தொடுக்கப்பட்ட நீதிமன்ற வழக்குகளை மீளப்பெறல் | 16 |


.

## 01. அறிமுகம்

19 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தின் மூலம் திருத்தப்பட்ட 54(1) உறுப்புரையின் பிரகாரம் அரசியலமைப்புப் பேரவையின் சிபாரிசுக்கு அமைய சனாதிபதி அவர்களினால் நியமிக்கப்பட்ட புதிய அரசாங்க சேவை ஆணைக்குழு 2015.10.15 ஆம் திகதி முதல் தனது பணிகளை ஆரம்பித்தது.

அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அரசியலமைப்பின் 55(5) ஆம் உறுப்புரைக்கு அமைய ஒவ்வொரு வருடமும் பாராளுமன்றத்திற்கு வருடாந்த அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்படுகின்றது. மேலும் அரசியலமைப்புப் பேரவையின் அறிவுரைக்கு அமைய ஒவ்வொரு தவணைக்குமான முன்னேற்ற அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படவுள்ளன. அவ்வாறு ஒவ்வொரு தவணைக்குமான முன்னேற்ற அறிக்கைகளை சமர்ப்பிக்கும் படி 2016 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் அறிவிக்கப்பட்டதற்கு அமைய 2016.01.01 ஆம் திகதியிலிருந்து 2016.09.30 ஆம் திகதி வரையிலான மூன்று தவணைகளினதும் முன்னேற்றம்ஒன்றாக சமர்ப்பிக்கப்பட்டது.

பாராளுமன்றத்திற்கு தவணை அடிப்படையில் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படவேண்டியிருப்பினும் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அதன் முன்னேற்றம் மாதாந்தம் பெற்றுக்கொள்ளப்பட்டு அந்த அறிக்கைகள் மேற்பார்வை செய்யப்படுகின்றன. அதற்கமைய கடந்த 2017.04.01 ஆம் திகதி தொடக்கம் 2017.06.30 ஆம் திகதி வரையிலான தவணையில் எவ்வித தடைகளும் இன்றி ஆணைக்குழுவின் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

## 02. அரசாங்க சேவை ஆணைக்குழு கூட்டங்கள்

2017.04.01 ஆம் திகதியிலிருந்து 2017.06.30 ஆம் திகதி வரை நடாத்தப்பட்ட கூட்டங்கள் பற்றிய விபரங்கள் பின்வருமாறு.

| மாதம் | கூட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|
| ஏப்ரல் | 07 |
| மே | 07 |
| ஜுன் | 08 |
| **மொத்தம்** | **22** |

## 03. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பிரிவுகளினது செயற்பாடுகள்

அரசாங்க சேவை ஆணைக்குழு பின்வரும் பிரிவுகளைக் கொண்டுள்ளது. அவற்றின் மூலம் ஆற்றப்படும் செயற்பாடுகள் பின்வருமாறு.

### I. <u>தாபனப் பிரிவு</u>

இல 1941/41 மற்றும் 2015.11.20 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தலின் மூலம் செய்யப்பட்டுள்ள அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அதிகாரக் கையளிப்புக்கு அமைய அரசாங்க சேவையில் அனுமதிக்கப்பட்டுள்ள சகல சேவைகளுக்குமென சேவைப் பிரமாணக் குறிப்பொன்றையும் அந்த சேவைகளுக்கு வெளியில் அனுமதிக்கப்பட்டுள்ள சகல பதவிகளுக்குமென ஆட்சேர்ப்புத் திட்டமொன்றையும் தயாரிப்பது தாபனப் பிரிவின் பொறுப்பாகும். அத்தகைய சேவை பிரமாணக் குறிப்புக்களையும் ஆட்சேர்ப்புத் திட்டங்களையும் தயாரிக்கின்ற போது அனுமதிக்கப்பட்ட சகல பதவிகளுக்கும் உத்தியோகத்தர்களை ஆட்சேர்க்கும் போது பின்பற்ற வேண்டிய ஆட்சேர்ப்பு முறை, ஆட்சேர்ப்புத் தகைமைகள்,பதவிக்குரிய சம்பள அளவுத் திட்டம்,சேவை நிபந்தனைகள், பதவி உயர்வு முறைமை மற்றும் ஏனைய சகல விபரங்களும் உள்ளடக்கப்படுகின்றன. ஏற்புடைய சேவைப் பிரமாணக் குறிப்பை அல்லது ஆட்சேரப்புத் திட்டத்தை அனுமதிப்பதற்கு முன்னர் பதவி அனுமதித்தல் தொடர்பாக முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் அனுமதியும் சம்பள அளவுத் திட்டம் தொடர்பாக சம்பளம் மற்றும் பதவியணி ஆணைக்குழுவின் சிபாரிசும் சேவைப் பிரமாணக் குறிப்பு அல்லது ஆட்சேர்ப்புத் திட்டத்தின் வரைவு தொடர்பான தாபன பணிப்பாளர் நாயகத்தின் சிபாரிசும் பெற்றுக்கொள்ளப்படும்.

தாபனப் பிரிவினால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள்.

(i) அரசாங்க சேவையில் அனுமதிக்கப்பட்டுள்ள சகல சேவைகளுக்கும் சேவைப் பிரமாணக் குறிப்பொன்றை தயாரித்தல்.

(ii) அந்த சேவைகளுக்கு வெளியில் அனுமதிக்கப்பட்டுள்ள சகல பதவிகளுக்குமென ஆட்சேர்ப்புத் திட்டமொன்றை தயாரித்தல்.

(iii) அரசாங்க சேவை ஆணைக்குழுவின் விடயப் பரப்பிற்குள் வரக்கூடிய அதிகாரங்களை கையளித்தல் தொடர்பான நடவடிக்கைகள்.

(iv) அரசாங்க சேவையின் நடைமுறை விதிகளை அடிப்படையாகக் கொண்டு அறிவுறுத்தல் கோவைகளை தயாரித்தல்.

(v) சகல சேவைகளுக்குமான இடமாற்ற நடைமுறைகளை தயாரித்தல் மற்றும் திருத்துதல்.

(vi) அனுமதிக்கப்பட்ட சேவைப் பிரமாணக் குறிப்பொன்றை, ஆட்சேர்ப்புத் திட்டமொன்றை அல்லது இடமாற்ற நடைமுறையொன்றை திருத்துவதற்கு தேவைப்படுமிடத்து ஏற்புடைய செயலாளரின் சிபாரிசின் அடிப்படையில் அந்த பிரமாணக் குறிப்பை அல்லது நடைமுறையை திருத்தி அனுமதித்தல்.

(vii) அதிகாரம் கையளிக்கப்பட்ட உத்தியோகத்தர்களினால் செய்யப்படும் நியமனங்கள், பதவி உயர்வுகள் தொடர்பில் எழக்கூடிய பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்காக முன்வைக்கப்படும் வேண்டுகோள் தொடர்பாக கொள்கை ரீதியான தீர்மானங்களை வழங்குதல்.

(viii) அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை ஒழுங்கு விதிகள், சேவைப் பிரமாணக் குறிப்புக்கள், ஆட்சேர்ப்புத் திட்டங்கள், இடமாற்ற நடைமுறைகள், சுற்றுநிருபங்கள் மற்றும் கட்டளைகளுக்கு அப்பாற்பட்டு செயற்பட நேரிடும் சந்தர்ப்பங்களில் அவை தொடர்பாக எழக்கூடிய பிரச்சினைகளுக்கு தீர்மானங்களை வழங்குதல்.

தாபனப் பிரிவின் முன்னேற்றம் (2017.04.01 ஆம் திகதி முதல் 2017.06.30 வரை)

| தொடர் இல | விடயம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | புதிய ஆட்சேரப்புத் திட்டங்கள் | 20 |
| 2 | புதிய சேவைப் பிரமாணக் குறிப்பு | 01 |
| 3 | இடமாற்ற நடைமுறைகள் | 02 |
| 4 | ஆட்சேர்ப்புத் திட்டங்களை திருத்துதல் | 17 |
| 5 | சேவைப் பிரமாணக் குறிப்புக்களை திருத்துதல் | 11 |
| 6 | இடமாற்ற நடைமுறைகளை திருத்துதல் | 06 |
| 7 | சுற்றறிக்கைகள் | 02 |
| 8 | விசேட சந்தர்ப்பங்களில் ஆட்சேர்ப்புத் திட்டங்களுக்கு அப்பாற்பட்டு செயற்படுவதற்காக முன்வைக்கப்படும் வேண்டுகோள்கள் | 04 |
| 9 | விசேட சந்தர்ப்பங்களில் சேவைப் பிரமாணக் குறிப்புக்களுக்கு அப்பாற்பட்டு செயற்படுவதற்காக முன்வைக்கப்படும் வேண்டுகோள்கள் | 01 |
| 10 | கொள்கை ரீதியான விடயங்கள் | 33 |
| 11 | பொதுவான விடயங்கள் | 43 |
| 12 | உயர் நீதிமன்றம், நிர்வாக மேன்முறையீட்டு நியாய சபை, மேன்முறையீட்டு நீதிமன்ற வழக்குகள் தொடர்பான விடயங்கள் | 17 |
| | **மொத்தம்** | **157** |

மீளாய்வுக்குரிய காலப்பிரிவில் நிர்வாக மேன்முறையீட்டு நியாய சபைக்கு முன்வைக்கப்பட்ட முறைப்பாடுகள் பற்றிய விபரம்

| 2017.04.01 ஆம் திகதிக்கு நிறைவு பெறாதவைகளின் எண்ணிக்கை | 2017.04.01 ஆம் திகதி முதல் 2017.06.30 ஆம் திகதி வரையில் கிடைக்கப்பெற்ற எண்ணிக்கை | 2017.06.30 ஆம் திகதிக்கு கிடைக்கப்பெற்ற மொத்த எண்ணிக்கை | அ.சே.ஆ. தீர்மானங்கள் உறுதிப் படுத்தப்பட்ட எண்ணிக்கை | அ.சே.ஆ. தீர்மானம் இரத்துச் செய்யப்பட்ட எண்ணிக்கை | 2017.06.30 ஆம் திகதிக்கு நிறைவு பெறாதவைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 32 | 04 | 36 | 0 | 0 | 36 |

**உயர் நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்குகள்**

| 2017.04.01 ஆம் திகதிக்கு நிறைவு பெறாதவைகளின் எண்ணிக்கை | 2017.04.01 ஆம் திகதி முதல் 2017.06.30 ஆம் திகதி வரையில் கிடைக்கப்பெற்ற எண்ணிக்கை | 2017.06.30 ஆம் திகதிக்கு கிடைக்கப்பெற்ற மொத்த வழக்குகளின் எண்ணிக்கை | உயர் நீதிமன்றத்தினால் நிராகரிக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை மற்றும் அ.சே.ஆ. தீர்மானத்துக்கு இணக்கம் தெரிவிக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | உயர் நீதிமன்றத்தினால் அ.சே.ஆ. தீர்மானங்கள் இரத்துச் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | 2017.06.30 ஆம் திகதிக்கு நிறைவு பெறாத வழக்குகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 71 | 06 | 77 | 03 | 0 | 74 |

**மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்குகள்**

| 2017.04.01 ஆம் திகதிக்கு நிறைவு பெறாதவைகளின் எண்ணிக்கை | 2017.04.01 ஆம் திகதி முதல் 2017.06.30 ஆம் திகதி வரையில் கிடைக்கப்பெற்ற எண்ணிக்கை | 2017.06.30 ஆம் திகதிக்கு கிடைக்கப்பெற்ற மொத்த வழக்குகளின் எண்ணிக்கை | மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் அ.சே.ஆ. தீர்மானங்கள் உறுதிப்படுத்தப்பட்ட எண்ணிக்கை | மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் அ.சே.ஆ. தீர்மானங்கள் இரத்துச் செய்யப்பட்ட மற்றும் நிவாரணங்கள் வழங்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | 2017.06.30 ஆம் திகதிக்கு நிறைவு பெறாத வழக்குகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 10 | 0 | 10 | 0 | 0 | 10 |

- நிர்வாக விடயங்கள் தொடர்பான பாராளுமன்ற ஆணையாளருக்கு (ஓம்புட்ஸ்மன்),மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு மற்றும் பொது மனுக்குழுவுக்கு மீளாய்வுக்குரிய காலப்பிரிவில் முறைப்பாடுகள் முன்வைக்கப்படவில்லை.

## II. நியமனப் பிரிவு

இல 1955/22 மற்றும் 2016.02.25 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் திருத்தப்பட்டுள்ள, இல 1941/41 மற்றும் 2015.11.20 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டுள்ள, இல 1989/29 மற்றும் 2016.01.29 ஆம் திகதிய, இல 1990/24 மற்றும் 2016.10.27 ஆம் திகதிய, இல 1992/7 மற்றும் 2016.11.07 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானி அறிவித்தல்களில் பிரசுரிக்கப்பட்டுள்ள,அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அதிகாரங்கள் கையளிக்கப்படாத அரசாங்க உத்தியோகத்தர்களின் (அமைச்சு செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், மாகாண அரசாங்க சேவை மற்றும் நீதித்துறை உத்தியோகத்தர்கள் தவிர்ந்த) நியமனங்கள் தொடர்பிலான பின்வரும் செயற்பாடுகள் நியமனப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

**நியமனப் பிரிவின் செயற்பாடுகள்**

i. அனுமதிக்கப்பட்ட சேவை பிரமாணக் குறிப்புக்கள் / ஆட்சேர்ப்புத் திட்டங்கள் / பதவி உயர்வுத் திட்டங்களுக்கு ஏற்ப ஆட்சேர்ப்புச் செய்தல்.
ii. சேவை நிரந்தரமாக்கல், சேவை முடிவுறுத்தல், முன்னர் வகித்த பதவிக்கு மீள அனுப்புதல்.
iii. பதில் கடமை / கடமை நிறைவேற்றல் அடிப்படையிலான நியமனம்,
iv. விடுவித்தல் (நிரந்தர / தற்காலிக)
v. ஒப்பந்த அடிப்படையிலான நியமனம், பதவி விலகல், சேவைக்கு/ பதவிக்கு மீண்டும் நியமித்தல், ஓய்வு பெறச்செய்தல் (அரசாங்க நிர்வாக சுற்றுநிருபம் 30/88 பிரகாரம், விருப்ப, கட்டாய, மருத்துவ காரணிகள் மீது)
vi. ஓய்வுபெற்ற அரசாங்க உத்தியோகத்தர்களை ஒப்பந்த அடிப்படையில் மீள நியமித்தல். சேவைப் பிரமாணக் குறிப்புக்களிலுள்ள அட்டவணைப்படுத்தப்பட்ட பதவிகளுக்கு (ஏற்புடைய சந்தர்ப்பங்களில்) நியமித்தல்.
vii. மேலே குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் விதிக்கப்படும் கட்டளைகள் / தீர்மானங்களுக்கு எதிராக நிர்வாக மேன்முறையீட்டு நியாய சபைக்கு முன்வைக்கப்படும் மேன்முறையீடுகள் மற்றும் உயர் நீதிமன்றத்தில் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தொடுக்கப்படும் மனுக்கள் தொடர்பாகவும் நடவடிக்கை எடுத்தல்.

**நியமனப் பிரிவின் முன்னேற்றம் (2017.04.01 ஆம் திகதி முதல் 2017.06.30ஆம் திகதி வரை)**

| தொடர் இல | விடயம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | ஒய்வு பெறுகை | 128 |
| 2 | நிரந்தரமாக்கல் | 165 |
| 3 | ஆட்சேர்ப்பு | 14 |
| 4 | ஒப்பந்த அடிப்படையில் மீள சேவையில் அமர்த்தல் | 213 |
| 5 | ஒப்பந்த அடிப்படையிலான நியமனம் | 08 |
| 6 | வினைத்திறன்காண் தடைதாண்டல் தொடர்பான தீர்மானங்கள் | 170 |
| 7 | பதில் கடமை / கடமைகளை நிறைவேற்றுவதற்கு நியமித்தல் | 178 |
| 8 | விடுவித்தல் | 13 |
| 9 | பதவி விலகல் | 05 |
| 10 | உள்ளீர்ப்புச் செய்தல் | 133 |
| | **மொத்தம்** | **1027** |

2017.04.01ஆம் திகதிக்கு பிரிவினால் தோற்றுவதற்கு எஞ்சியிருந்த வழக்குகள் மற்றும் முறைப்பாடுகள் பற்றிய விபரங்கள் மற்றும் அவற்றில் 2017.06.30 ஆம் திகதியன்று நிறைவுபெற்றுள்ள வழக்குகள் மற்றும் முறைப்பாடுகளின் எண்ணிக்கை.

**உயர் நீதிமன்ற வழக்குகள்**

| | 2017.04.01ஆம் திகதிக்கு எஞ்சியிருந்த எண்ணிக்கை | 2017.06.30ஆம் திகதிக்கு நிறைவடைந்தவை |
|---|---|---|
| 2017.04.01 ஆம் திகதிக்கு முன்னர் தொடுக்கப்பட்டவை | 31 | 01 |
| 2017.04.01 ஆம் திகதிக்கு பின்னர் தொடுக்கப்பட்டவை | 03 | --- |

**மேன்முறையீட்டு நீதிமன்ற வழக்குகள்**

| | 2017.04.01ஆம் திகதிக்கு எஞ்சியிருந்த எண்ணிக்கை | 2017.06.30ஆம் திகதிக்கு நிறைவடைந்தவை |
|---|---|---|
| 2017.04.01 ஆம் திகதிக்கு முன்னர் தொடுக்கப்பட்டவை | 12 | --- |
| 2017.04.01 ஆம் திகதிக்கு பின்னர் தொடுக்கப்பட்டவை | --- | --- |

**நிர்வாக மேன்முறையீட்டு நியாய சபைக்கு முன்வைக்கப்பட்ட முறைப்பாடுகள;**

| | 2017.04.01ஆம் திகதிக்கு எஞ்சியிருந்த எண்ணிக்கை | 2017.06.30ஆம் திகதிக்கு நிறைவடைந்தவை |
|---|---|---|
| 2017.04.01 ஆம் திகதிக்கு முன்னர் தொடுக்கப்பட்டவை | 94 | 04 |
| 2017.04.01 ஆம் திகதிக்கு பின்னர் தொடுக்கப்பட்டவை | 01 | --- |

## III. பதவி உயர்வுப் பிரிவு

இல 1955/22 மற்றும் 2016.02.25 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் திருத்தப்பட்டுள்ள, இல 1941/41 மற்றும் 2015.11.20 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டுள்ள, இல 1989/29 மற்றும் 2016.01.29 ஆம் திகதிய, இல 1990/24 மற்றும் 2016.10.27 ஆம் திகதிய, இல 1992/7 மற்றும் 2016.11.07 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானி அறிவித்தல்களில் பிரசுரிக்கப்பட்டுள்ள, அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அதிகாரங்கள் கையளிக்கப்படாத அரசாங்க உத்தியோகத்தர்களின் (அமைச்சு செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், மாகாண அரசாங்க சேவை மற்றும் நீதித்துறை உத்தியோகத்தர்கள் தவிர்ந்த) நியமனங்கள் /பதவி உயர்வுகள் தொடர்பிலான பின்வரும் செயற்பாடுகள் பதவி உயர்வுப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

i. ஒவ்வொரு சேவைக்கும் அல்லது உத்தியோகத்தர் வகுதிகளுக்கும் அனுமதிக்கப்பட்ட சேவை பிரமாணக் குறிப்புக்கள், ஆட்சேர்ப்புத் திட்டங்கள்,பதவி உயர்வுத் திட்டங்கள் ஆகியவற்றுக்கு ஏற்ப ஒரு தரத்திலிருந்து இன்னுமொரு தரத்திற்கு செய்யப்படும் பதவி உயர்வுகளைப் போன்றுசேவைமூப்பு மற்றும் திறமை அடிப்படையில் போட்டிப் பரீட்சைகள்,கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை பெறுபேறுகளுக்கு அமைய தெரிவு செய்யப்பட்டு வழங்கப்படும் பதவி உயர்வுகள்.

ii. சேவைமூப்பு மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைகளின் பெறுபேறுகளுக்கு அமைய பதவி உயர்வுகள் வழங்கி ஏற்புடைய பதவிகளுக்கு நியமித்தல்.

iii. அகில இலங்கை சேவைகளில் தரம் 1 மற்றும் அதற்கு மேலுள்ள தரங்களிலுள்ள உத்தியோகத்தர்களை ஒரு பதவியிலிருந்து இன்னுமோர் பதவிக்கு மாற்றும் போது அதற்கான முன் அனுமதியை வழங்கி ஏற்புடைய புதிய பதவிக்கு நியமித்தல்.

iv. மேலே குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் விதிக்கப்படும் கட்டளைகள் / தீர்மானங்களுக்கு எதிராக நிர்வாக மேன்முறையீட்டு நியாய சபைக்கு முன்வைக்கப்படும் மேன்முறையீடுகள் மற்றும் உயர் நீதிமன்றத்தில் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தொடுக்கப்படும் மனுக்கள் தொடர்பாகவும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

v. பொது மனுக்குழு, நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் (ஒம்புட்ஸ்மன்), மனித உரிமைகள் ஆணைக்குழு ஆகியவற்றுக்கு தேவையான அவதானிப்பு அறிக்கைகளை வழங்குதல் மற்றும் தேவையான சந்தர்ப்பங்களில் அரசாங்க சேவை ஆணைக்குழுவை பிரதிநிதித்துவப்படுத்துதல்.

**பதவி உயர்வுப் பிரிவின் முன்னேற்றம் (2017.04.01 ஆம் திகதி முதல் 2017.06.30 வரை)**

| | **விடயம்** | |
|---|---|---|
| 1 | ஒரு தரத்திலிருந்து இன்னுமொரு தரத்திற்கு பதவி உயர்வு | 745 |
| 2 | தேர்வு அடிப்படையிலான பதவி உயர்வு | 24 |
| 3 | பதவிகளுக்கு நியமித்தல் | 47 |
| | **மொத்தம்** | **816** |

2017.04.01ஆம் திகதிக்கு பிரிவினால் தோற்றுவதற்கு எஞ்சியிருந்த வழக்குகள் மற்றும் முறைப்பாடுகள் பற்றிய விபரங்கள் மற்றும் அவற்றில் 2017.06.30 ஆம் திகதியன்று நிறைவுபெற்றுள்ள வழக்குகள் மற்றும் முறைப்பாடுகளின் எண்ணிக்கை.

**உயர் நீதிமன்ற வழக்குகள்**

| | 2017.04.01ஆம் திகதிக்கு எஞ்சியிருந்த எண்ணிக்கை | 2017.06.30ஆம் திகதிக்கு நிறைவடைந்தவைகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 2017.04.01 ஆம் திகதிக்கு முன்னர் தொடுக்கப்பட்டவை | 36 | 01 |
| 2017.04.01ஆம் திகதிக்கு பின்னர் தொடுக்கப்பட்டவை | 03 | --- |

**மேன்முறையீட்டு நீதிமன்ற வழக்குகள்**

| | 2017.04.01ஆம் திகதிக்கு எஞ்சியிருந்த எண்ணிக்கை | 2017.06.30ஆம் திகதிக்கு நிறைவடைந்தவைகளின் எண்ணக்கை |
|---|---|---|
| 2017.04.01 ஆம் திகதிக்கு முன்னர் தொடுக்கப்பட்டவை | 05 | --- |
| 2017.04.01 ஆம் திகதிக்கு பின்னர் தொடுக்கப்பட்டவை | --- | --- |

**நிர்வாக மேன்முறையீட்டு நியாய சபைக்கு முன்வைக்கப்பட்ட முறைப்பாடுகள்**

| | 2017.04.01ஆம் திகதிக்கு எஞ்சியிருந்த எண்ணிக்கை | 2017.06.30ஆம் திகதிக்கு நிறைவடைந்தவைகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 2017.04.01 ஆம் திகதிக்கு முன்னர் தொடுக்கப்பட்டவை | 66 | --- |
| 2017.04.01 ஆம் திகதிக்கு பின்னர் தொடுக்கப்பட்டவை | 03 | --- |

**IV.ஒழுக்காற்றுப் பிரிவு**

அரசியலமைப்பின் 57(1) ஆம் உறுப்புரைக்கு அமைய 2016.10.19 ஆம் திகதிய இல 1989/27,1989/28, 1989/29 மற்றும் 2016.11.07 ஆம் திகதிய இல 1992/7 எனும் அதி விசேட வர்த்தமானி அறிவித்தல்கள் மூலம் கல்வி அமைச்சின் கீழுள்ள உத்தியோகத்தர்கள் மற்றும் 2016.10.27 ஆம் திகதிய 1990/24, 1990/25 எனும் அதி விசேட வர்த்தமானி அறிவித்தல்கள் மூலம் சுகாதார, போஷாக்கு மற்றும் சுதேச மருத்துவத்துறை அமைச்சின் கீழுள்ள உத்தியோகத்தர்கள் தவிர்ந்த அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அதிகாரங்கள் கையளிப்பு தொடர்பான இல 1955/22 மற்றும் 2016.02.25 மற்றும் இல. 2016/37 மற்றும் 2017/04/16 ஆம் திகதி மூலம் திருத்தப்பட்ட இல 1941/41 மற்றும் 2015.11.20 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள அரசாங்க சேவை ஆணைக்குழுவின் விடயப் பரப்பிற்குள் வரக்கூடிய உத்தியோகத்தர்களின் ஒழுக்காற்று நடவடிக்கைகள் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன. ஒழுக்காற்றுப் பிரிவுக்கு கிடைக்கப்பெறும் சகல கடிதங்கள் மற்றும் ஆவணங்கள் தொடர்பாக விரிவாக ஆய்வு செய்யப்பட்டு பக்கச்சார்பற்ற தீர்மானங்களை எடுக்கும் பொருட்டு தெளிவாகஅந்த விடயம் தொடர்பான தேவையான அவதானிப்புக்கள் மற்றும் சிபாரிசுகள் ஆணைக்குழுவுக்கு சமர்ப்பித்து தேவையான ஒத்துழைப்பினை வழங்குதல்.

**ஒழுக்காற்றுப் பிரிவின் செயற்பாடுகள்**

மேற்படி பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அரசாங்க சேவை ஆணைக்குழுவின் ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டுக்கு உட்படுகின்ற உத்தியோகத்தர்களின் ஒழுக்காற்று தொடர்பான நடவடிக்கைகள் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

1. **ஒழுக்காற்று நடவடிக்கையொன்று தொடர்பாக**

i. திணைக்களத் தலைவரால் அல்லது அமைச்சு செயலாளரொருவரால் மேற்கொள்ளப்படும் ஆரம்ப விசாரணை அறிக்கையொன்று ஒழுக்காற்றுப் பிரிவுக்கு கிடைக்கப்பெற்ற பின்னர் அது தொடர்பாக சிறந்த முறையில் ஆய்வு செய்து ஏற்புடைய தகவல்கள், ஆவணங்கள், அவதானிப்புக்கள் மற்றும் சிபாரிசுகள் ஆகியவற்றை நிறைவு செய்த பின்னர் பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களுக்கு எதிராக குற்றப்பத்திரமொன்றை வழங்குதல் அல்லது வழங்காதிருத்தல் தொடர்பான பொருத்தமான தீர்மானமொன்று அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் எடுக்கப்படும்.

ii. குற்றப்பத்திரமொன்றை வழங்க தீர்மானிக்குமிடத்து அந்த குற்றப்பத்திரத்தை ஏற்புடைய உத்தியோகத்தருக்கு நிர்வாக அதிகாரி மற்றும் அமைச்சுச் செயலாளர் மற்றும் திணைக்களத் தலைவர் ஊடாக ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அந்த குற்றப்பத்திரத்திற்கு குற்றஞ்சாட்டப்பட்டவரினால் சமர்ப்பிக்கப்படும் பதில் தொடர்பாக ஏற்புடைய திணைக்களத் தலைவர், அமைச்சுச் செயலாளர் மற்றும் நிர்வாக அதிகாரியின் அவதானிப்புக்கள் மற்றும் சிபாரிசுகளை பரிசீலனைக்கு எடுத்து முறைமைசார் ஒழுக்காற்று விசாரணையொன்றை நடாத்துதல் அல்லது நடத்தாமலிருத்தல் தொடர்பாக தீர்மானமொன்று எடுக்கப்படும்.

iii. முறைமைசார் ஒழுக்காற்று விசாரணையொன்று நடாத்துவதற்கு தீர்மானிக்கப்படுமிடத்து அதற்கான அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் பேணப்பட்டு வரும் விசாரணை உத்தியோகத்தர்களின் குழாமிலிருந்து பொருத்தமான உத்தியோகத்தர் விசாரணை உத்தியோகத்தராக நியமித்து முறைமைசார் ஒழுக்காற்று விசாரணையை நடாத்துமாறு பணிக்கப்படும். ஏதேனும் காரணத்தினால் முறைமைசார் ஒழுக்காற்று விசாரணை

நடத்தாமலிருப்பதற்கு தீர்மானிக்கப்படுமிடத்து குற்றஞ்சாட்டப்பட்ட உத்தியோகத்தரினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பதிலையும் அதற்காக திணைக்களத் தலைவர், அமைச்சு செயலாளர் மற்றும் நிர்வாக அதிகாரி ஆகியோரினால் முன்வைக்கப்பட்டுள்ள அவதானிப்புக்கள் மற்றும் சிபாரிசுகளை அடிப்படையாகக் கொண்டு குற்றஞ்சாட்டப்பட்ட உத்தியோகத்தரை சகல குற்றச்சாட்டுக்களிலிருந்தும் விடுவிப்பதற்கு அல்லது பொருத்தமான ஒழுக்காற்றுத் தண்டனையொன்றை விதிப்பதற்கு தீர்மானிக்கப்படும்.

iv. முறைமைசார் ஒழுக்காற்று விசாரணை நடைப்பெற்றால் அந்த விசாரணையின் அறிக்கை அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு கிடைக்கப்பெற்ற பின்னர் அந்த முறைமைசார் ஒழுக்காற்று விசாரணையின் போது முன்வைக்கப்பட்ட சகல வாய்மூல மற்றும் எழுத்துமூல சாட்சியங்கள், விசாரணை உத்தியோகத்தரின் அறிக்கை, வழக்கு தொடுநரின் அறிக்கை மற்றும் எதிர்காப்பு உத்தியோகத்தரின் அறிக்கை என்பனவற்றை பரிசீலனைக்கு எடுத்து குற்றஞ்சாட்டப்பட்ட உத்தியோகத்தரை சகல குற்றச்சாட்டுக்களிலிருந்தும் விடுவிப்பதற்கு அல்லது ஒரு குற்றத்திற்கு அல்லது சில குற்றங்களுக்கு அல்லது சகல குற்றங்களுக்கும் குற்றவாளியென தீர்மானித்து பொருத்தமான ஒழுக்காற்றுக் கட்டளையொன்று அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் விதிக்கப்படும்.

v. மேலும் ஒழுக்காற்று நடைமுறையின் ஒரு பகுதியாக எவரேனுமொரு குற்றஞ்சாட்டப்பட்ட உத்தியோகத்தரை பணித்தடை செய்தல் அல்லது அவ்வாறு பணித்தடை செய்த பின்னர் அவரை மீண்டும் சேவையில் அமர்த்துதல் அல்லது கட்டாய லீவில் அனுப்புதல் அல்லது முடிவுறாத ஒழுக்காற்று விடயங்கள் இருக்கும் சந்தர்ப்பத்தில் ஏற்புடைய உத்தியோகத்தர் ஓய்வுபெற வேண்டி ஏற்பட்டால் அத்தகைய ஓய்வுபெறுதலை ஓய்வூதியப் பிரமாணக் குறிப்பின் 12 ஆம் பிரிவுக்கு அமைய மேற்கொள்ளல்.

2. **கல்விச் சேவைக்குழு மற்றும் சுகாதார சேவைக்குழுவினால் வழங்கப்படும் ஒழுக்காற்றுக் கட்டளைகளுக்கு ஏற்புடைய மேன்முறையீடுகள் தொடர்பாக**

அரசியலமைப்பின் 57(1) ஆம் உறுப்புரையின் விதிமுறைகளுக்கு அமைய 2016.10.19 ஆம் திகதிய இல 1989/27,1989/28, 1989/29 மற்றும் 2016.11.07 ஆம் திகதிய இல 1992/7 எனும் அதி விசேட வர்த்தமானி அறிவித்தல்கள் மூலம் கல்வி அமைச்சின் கீழுள்ள உத்தியோகத்தர்கள் தொடர்பாக கல்விச் சேவைக்குழுவினால் மற்றும் 2016.10.27 ஆம் திகதிய 1990/24, 1990/25 எனும் அதி விசேட வர்த்தமானி அறிவித்தல்கள் மூலம் சுகாதார, போஷாக்கு மற்றும் சுதேச மருத்துவத்துறை அமைச்சின் கீழுள்ள உத்தியோகத்தர்கள் தொடர்பாக சுகாதார சேவைக்குழுவினாலும் வழங்கப்படும் ஒழுக்காற்றுக் கட்டளைகளுக்கு எதிராக அந்த உத்தியோகத்தர்களினால் முன்வைக்கப்படும் மேன்முறையீடுகளில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள், அந்த மேன்முறையீடு தொடர்பாக ஏற்புடைய குழுவினால் மற்றும் அந்த அலுவலர்களின் நிர்வாக அதிகாரியினால் சமர்ப்பிக்கப்படும் அவதானிப்புரைகள் மற்றும் சிபாரிசுகளை கருத்திற்கொண்டு அந்த உத்தியோகத்தர்களுக்கு நிவாரணம் வழங்குதல் / மேன்முறையீட்டை நிராகரித்தல்.

**3.பதவி வெறிதாக்கல் அறிவித்தல்களுக்கு எதிரான மேன்முறையீடுகள் தொடர்பாக**

2016.10.19 ஆம் திகதிய இல 1989/27,1989/28, 1989/29 மற்றும் 2016.11.07 ஆம் திகதிய இல 1992/7 எனும் அதி விசேட வர்த்தமானி அறிவித்தல்கள் மூலம் கல்வி அமைச்சின் கீழுள்ள உத்தியோகத்தர்கள் மற்றும் 2016.10.27 ஆம் திகதிய 1990/24, 1990/25 மற்றும் 2017.02.01 ஆம் திகதிய இல 2004/49 எனும் அதி விசேட வர்த்தமானி அறிவித்தல்கள் மூலம் சுகாதார, போஷாக்கு மற்றும் சுதேச மருத்துவத்துறை அமைச்சின் கீழுள்ள உத்தியோகத்தர்கள் தவிர்ந்த அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அதிகாரங்கள் கையளிப்பு தொடர்பான இல 1955/22 மற்றும் 2016.02.25 இல. 2016/37 மற்றும் 2017.04.26 ஆம் திகதி மூலம் திருத்தப்பட்ட இல 1941/41 மற்றும் 2015.11.20 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள அரசாங்க சேவை ஆணைக்குழுவின் விடயப் பரப்பிற்குள் வரக்கூடிய உத்தியோகத்தர்களின் சேவை வெறிதாக்கல் அறிவித்தல்களுக்கு எதிராக சமர்ப்பிக்கப்படும் மேன்முறையீடுகளிலுள்ள விடயங்கள் மற்றும் அந்த மேன்முறையீடுகள் தொடர்பாக அந்த உத்தியோகத்தர்களின் நிர்வாக அதிகாரிகளினால் சமர்ப்பிக்கப்படும் அவதானிப்புரைகள் மற்றும் சிபாரிசுகளை பரிசீலனைக்கு எடுத்து அந்த உத்தியோகத்தர்களை பொருத்தமானவாறு மீண்டும் சேவையில் அமர்த்தல் / அமர்த்தாமலிருத்தல்.

4. **உயர் நீதிமன்றம், நிர்வாக மேன்முறையீட்டு நியாய சபை, மனித உரிமைகள் ஆணைக்குழு, பாராளுமன்ற பொது மனுக்குழு மற்றும் ஒம்புட்ஸ்மனிடம் சமர்ப்பிக்கப்படும் மேன்முறையீடுகள் தொடர்பாக.**

ஆணைக்குழுவினால் விதிக்கப்படும் ஒழுக்காற்றுக் கட்டளைகளுக்கு அல்லது அவ்வாறான ஒழுக்காற்றுத் நடவடிக்கை தொடர்பான தீர்மானங்களுக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் மனுக்கல் தொடர்பாக அவதானிப்புரைகளை தயாரித்தல்,நிர்வாக மேன்முறையீட்டு நியாய சபை, பாராளுமன்ற பொது மனுக்குழு மற்றும் ஒம்புட்ஸ்மனிடம் சமர்ப்பிக்கப்படும் மேன்முறையீடுகள் தொடர்பாக அவதானிப்புரைகளை தயாரித்தல் மற்றும் மேன்முறையீடுகள் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் தினங்களில் அந்த நிறுவனங்களின் முன் தோற்றுதல் மற்றும் மனித உரிமை ஆணைக்குழுவினால் செய்யப்படும் விசாரணைகள் தொடர்பாக பொருத்தமான முறையில் நடவடிக்கை எடுத்தல்.

**ஒழுக்காற்றுப் பிரிவின் முன்னேற்றம் (2017.04.01 ஆம் திகதி முதல் 2017.06.30 வரை)**

| தொ. இல | விடயம் | வழங்கப்பட்ட கட்டளைகளின் எண்ணிக்கை 2017.04.01 தொடக்கம் 2017.06.30 வரை |
|---|---|---|
| 01 | குற்றப்பத்திரங்கள் வழங்குதல் | 09 |
| 02 | குற்றப்பத்திரங்களை திருத்துதல் | 03 |
| 03 | குற்றங்களிலிருந்து விடுவித்தல் | 02 |
| 04 | பதவி நீக்கம் செய்தல் | 01 |
| 05 | ஏனைய ஒழுக்காற்றுத் தண்டனைகள் | 09 |
| 06 | மீண்டும் சேவையில் அமர்த்தல் | 01 |
| 07 | மேன்முறையீடுகளை நிராகரித்தல் | 03 |
| 08 | ஓ.பி.கு. 12 ஆம் பிரிவின் கீழ் ஓய்வு பெறச்செய்தல் | 02 |
| 09 | கட்டாய ஓய்வுபெறுகை | 01 |
| 10 | பணித்தடை செய்தல் | 02 |
| 11 | ஒழுக்காற்று காரணங்களுக்கானஓய்வுபெறுகையினை சாதாரண ஓய்வுபெறுகையாக மாற்றுதல் | 02 |
| 12 | சேவையிலிருந்து ஓய்வுபெறச் செய்தல் | 01 |
| 13 | ஒழுக்காற்று நடவடிக்கைகளை நிறைவுசெய்தல் | 06 |
| 14 | ஏனைய பொதுவான கட்டளைகள் | 51 |
| 15 | நிர்வாக மேன்முறையீட்டு நியாய சபையில் விசாரணையிலுள்ள மேன்முறையீடுகளுக்கான அவதானிப்புரைகள் | 19 |
| 16 | நீதிமன்ற விண்ணப்பங்களுக்கான அவதானிப்புரைகள் | 03 |
| | **மொத்தம்** | **115** |

**மீளாய்வுக்குரிய காலப்பகுதியில் நடவடிக்கை எடுக்கப்பட்ட வழக்குகள் பற்றிய விபரம்**

| | **உயர் நீதிமன்றத்தின் விண்ணப்பங்களின் எண்ணிக்கை** | **மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் விண்ணப்பங்களின் எண்ணிக்கை** | **நிர்வாக மேன்முறையீட்டு நியாய சபையின் மேன்முறையீடுகளின் எண்ணிக்கை** |
|---|---|---|---|
| 2017.04.01 ஆம் திகதியன்று தோற்றுவதற்கு எஞ்சியிருந்த வழக்குகளின் எண்ணிக்கை | 09 | 09 | 121 |
| 2017.04.01 ஆம் திகதியன்று எஞ்சியிருந்த எண்ணிக்கையில் 2017.06.30 ஆம் திகதியன்று நிறைவடைந்துள்ளவை | 01 | --- | 05 |
| 2017.04.01 ஆம் திகதி தொடக்கம் 2017.06.30 ஆம் திகதி வரை புதிதாக தொடுக்கப்பட்டவை | 0 | 01 | 07 |
| 2017.06.30 ஆம் திகதி நடவடிக்கை எடுப்பதற்கு எஞ்சியுள்ள வழக்குகள் | 08 | 10 | 123 |

## V. மேன்முறையீட்டுப் பிரிவு

அதிகாரம் கையளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரால் வழங்கப்படும் கட்டளையினால் அதிருப்திக்குள்ளாகும் அரசாங்க உத்தியோகத்தர்கள் அரசியலமைப்பின் 58 (1) உறுப்புரையின் பிரகாரம் அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கின்ற எழுத்துமூல மேன்முறையீடு தொடர்பாக தீர்மானமெடுப்பதற்கும் அந்த மேன்முறையீடு தொடர்பாக உரிய காலஎல்லைக்குள் தீர்மானத்தை வழங்குவதற்கும் மேன்முறையீட்டுப் பிரிவினால் ஆணைக்குழுவுக்கு ஒத்துழைப்பு வழங்கப்படுகின்றது.

**மேன்முறையீட்டுப் பிரிவின் செயற்பாடுகள்**

i. ஒவ்வொரு மேன்முறையீடு தொடர்பிலும் ஏற்புடைய அமைச்சு/ திணைக்களங்களிலிருந்து அவதானிப்புக்கள் மற்றும் சிபாரிசுகள் அடங்கிய அறிக்கைகளை கோருதல்.
ii. அதன் பின்னர் ஒவ்வொரு மேன்முறையீடு தொடர்பிலும் விரிவான அறிக்கையொன்றை தயாரித்து அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு சமர்ப்பித்தல்.
iii. மேன்முறையீடுகள் தொடர்பாக அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் வழங்கப்படும் தீர்மானங்களை மேன்முறையீட்டாளருக்கும் ஏனைய தரப்பினருக்கும் அறிவித்தல்.
iv. மேன்முறையீடுகள் தொடர்பாக அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் வழங்கப்படும் தீர்மானங்களுக்கு எதிராக நிர்வாக மேன்முறையீட்டு நியாய சபைக்கு முன்வைக்கும் மேன்முறையீடுகள் தொடர்பில் அவதானிப்பு அறிக்கைகளை தயாரித்தல் மற்றும் அந்த மேன்முறையீடுகள் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் சந்தர்ப்பத்தில் அரசாங்க சேவை ஆணைக்குழு சார்பில் அந்த நியாய சபையின் முன் தோன்றுதல்.
v. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தீர்மானம் தொடர்பாக பொது மனுக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்படும் மனுக்கள் தொடர்பாக அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அவதானிப்புரைகளை வழங்குதல்.
vi. பொது மனுக்குழுவினால் முறைப்பாடுகள் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் சந்தர்ப்பத்தில் அக்குழுவின் முன் தோற்றுதல்.
vii. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தீர்மானங்களுக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் மனுக்கள் தொடர்பாக அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அவதானிப்புரைகள் / சிபாரிசுகளை முன்வைத்தல்.
viii. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தீர்மானம் தொடர்பாக நிர்வாக விடயங்களுக்கான பாராளுமன்ற ஆணையாளரிடம் (ஓம்புட்ஸ்மன்) சமர்ப்பிக்கப்படும் முறைப்பாடுகள் தொடர்பாக அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அவதானிப்புரைகளை வழங்குதல்.
ix. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தீர்மானம் தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் தொடர்பாக அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அவதானிப்புரைகளை வழங்குதல்.
x. உயர் நீதிமன்ற மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்ற வழக்குகள் தொடர்பாக சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு தகவல்களை வழங்குதல்.

**மேன்முறையீட்டுப் பிரிவின் முன்னேற்றம் (2017.04.01ஆம் திகதி முதல் 2017.06.30ஆம் திகதி வரை)**

| தொ. இல | விடயம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | 2017.04.01 ஆம் திகதி முதல்2017.06.30ஆம் திகதி வரையில் கிடைக்கப்பெற்ற மேன்முறையீடுகளின் எண்ணிக்கை | 246 |
| 2 | 2017.04.01 ஆம் திகதி முதல்2017.06.30ஆம் திகதி வரையில் அதிகாரம் கையளிக்கப்பட்ட உத்தியோகத்தர்களினால் அவதானிப்புகள் மற்றும் சிபாரிசுகள் அடங்கிய அறிக்கைகள் கோரப்பட்டுள்ள மேன்முறையீடுகளின் எண்ணிக்கை (முன்னைய வருடங்களும் உள்ளடங்களாக) | 108 |
| 3 | 2017.04.01 ஆம் திகதி முதல் 2017.06.30ஆம் திகதி வரையில் நடவடிக்கை நிறைவு செய்யப்பட்ட மேன்முறையீடுகளின் எண்ணிக்கை (முன்னைய வருடங்களும் உள்ளடங்களாக) | 193 |

| | | | |
|---|---|---|---|
| | நிறைவு செய்யப்பட்ட மேன்முறையீடுகள் பற்றிய விபரம் பின்வருமாறு | | |
| | ஒழுக்காற்று விடயங்கள் தொடர்பான மேன்முறையீடுகள் | 37 | |
| | பதவி உயர்வுகள் அறிவித்தல் தொடர்பான மேன்முறையீடுகள் | 19 | |
| | பதவி வெறிதாக்கல் தொடர்பான மேன்முறையீடுகள் | 51 | |
| | இடமாற்றங்கள் தொடர்பான மேன்முறையீடுகள் | 48 | |
| | நியமனங்கள் தொடர்பான மேன்முறையீடுகள் | 01 | |
| | பணித்தடை செய்தல் தொடர்பான மேன்முறையீடுகள் | 03 | |
| | வேறு | 34 | |
| | **மொத்தம்** | **193** | |
| 4 | 2017.04.01 ஆம் திகதி முதல் 2017.06.30ஆம் திகதி வரையில்கிடைக்கப்பெற்ற உயர் நீதிமன்ற வழக்குகளின் எண்ணிக்கை | | 05 |
| 5 | 2017.04.01 ஆம் திகதி முதல் 2017.06.30ஆம் திகதி வரையில்கிடைக்கப்பெற்ற மேன்முறையீட்டு நியாய சபை வழக்குகளின் எண்ணிக்கை | | 19 |
| 6 | 2017.04.01 ஆம் திகதி முதல் 2017.06.30ஆம் திகதி வரையில்கிடைக்கப்பெற்ற பொதுமனுக்குழுவின் விசாரணைகளின் எண்ணிக்கை | | 05 |

**மீளாய்வுக்குரிய காலப்பகுதியில் நடவடிக்கை எடுக்கப்பட்ட வழக்குகள் பற்றிய விபரம்**

| விபரம் | 2017.04.01ஆம் திகதிஇருந்த வழக்குகள் | 2017.04.01ஆம் திகதி முதல் 2017.06.30ஆம் திகதி வரை புதிதாக கிடைக்கப் பெற்றவைகளின் எண்ணிக்கை | 2017.04.01 ஆம் திகதி முதல் 2017.06.30ஆம் திகதி வரை உயர் நீதிமன்றம் / மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் தீர்மானங்கள் வழங்கப்பட்டுள்ள எண்ணிக்கை | 2017.06.30 ஆம் திகதிக்கு உள்ள வழக்குகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| உயர் நீதிமன்ற வழக்குகளின் எண்ணிக்கை | 30 | 05 | 06 | 29 |
| மேன்முறையீட்டு நீதிமன்ற வழக்குகளின் எண்ணிக்கை | 06 | --- | --- | 06 |

## VI. கல்விச் சேவைக்குழு

அரசியலமைப்பின் 57(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் இல 1989/29 மற்றும் 2016.10.19 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் கல்விச் சேவைக்குழுவுக்கு அதிகாரங்கள் கையளிக்கப்பட்டுள்ளன. அத்தோடு,அதன்"ஆ" அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரக் கையளிப்புக்குரிய ஏற்பாடுகள் 2016.10.20 ஆம் திகதி செயல்வலுப்பெறும் வண்ணம் இல 1992/7 மற்றும் 2016.11.07 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல் மூலம் திருத்தப்பட்டுள்ளது.

மேலும், மீண்டும் அரசியலமைப்பின் 57(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் இல 2014/03 மற்றும் 2017.04.11 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் கல்விச் சேவைக்குழுவுக்கு அதிகாரங்கள் கையளிக்கப்பட்டுள்ளன.

### கல்விச் சேவைக்குழுவின் செயற்பாடுகள்

இல. 2014/03 மற்றும் 2017.04.11 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டுள்ள அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அதிகாரங்கள் கையளிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் தொடர்பாக முன்வைக்கப்படும் பின்வரும் விடயங்கள் தொடர்பாக கல்விச் சேவைக்குழுவினால் தீர்மானங்கள் எடுக்கப்படுகின்றன.

i. அனுமதிக்கப்பட்ட சேவை பிரமாணக் குறிப்புக்கள் / ஆட்சேர்ப்புத் திட்டங்கள் / பதவி உயர்வுத் திட்டங்களுக்கு ஏற்ப ஆட்சேர்ப்பு, சேவை நிரந்தரமாக்கல், சேவை முடிவுறுத்தல், முன்னர் வகித்த பதவிக்கு மீள அனுப்புதல், பதில் கடமை / கடமை நிறைவேற்றல் அடிப்படையிலான நியமனம், விடுவித்தல் (நிரந்தர / தற்காலிக),பதவி இராஜினாம செய்தல்,பதவி வெறிதாக்கல் அறிவித்தல்களுக்கு எதிரான மேன்முறையீடுகளை பரிசீலனைக்கு எடுத்தல்,சேவைக்கு/ பதவிக்கு மீண்டும் நியமித்தல், ஓய்வு பெறச்செய்தல் மற்றும் ஓய்வுபெற்ற அரசாங்க உத்தியோகத்தர்களை ஒப்பந்த அடிப்படையில் மீள சேவைக்கு அமர்த்தல்.

ii. அனுமதிக்கப்பட்ட சேவை பிரமாணக் குறிப்புக்கள் / ஆட்சேர்ப்புத் திட்டங்கள் / பதவி உயர்வுத் திட்டங்களுக்கு ஏற்ப பதவி உயர்வு வழங்குதல் (ஒரு தரத்திலிருந்து இன்னொரு தரத்திற்கு / சேவை மூப்பு மற்றும் திறமை அடிப்படையில்)

iii. வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைகள் தொடர்பாக நிவாரணம் வழங்குதல்.

iv. கல்விச் சேவைக்குழுவின் விடயப் பரப்புக்குள் வரக்கூடிய உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையவாறு தாபன விதிக்கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் முதலாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றங்கள் தொடர்பான ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு மற்றும் பதவி நீக்கம் செய்தல்.

v. அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பான பிரச்சினைகள் (இல PSC/EST/02-03/05/2016 மற்றும் 2016.12.09 ஆம் திகதிய அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தீர்மானத்தை அறிவித்தல்.

**கல்விச் சேவைக்குழுவின் முன்னேற்றம் (2017.04.01 முதல் 2017.06.30ஆம் திகதி வரை)**

| தொ.இ | விடயம் | எண்ணிக்கை | |
|---|---|---|---|
| 01 | ஓய்வுபெறுகை | 67 | |
| | நிரந்தரமாக்கல் | 25 | |
| | பதவி உயர்வு | 74 | |
| | உள்ளீர்ப்பு | 679 | |
| | விடுவித்தல் | 26 | |
| | இணைப்புச் செய்தல் | 01 | |
| | வினைத்திறன்காண் தடைத்தாண்டல் தீர்மானங்கள் | 22 | |
| | பதவிகளுக்கு நியமித்தல் | 06 | |
| | மேன்முறையீடுகள் | 06 | |
| | ஏனைய கட்டளைகள் | 15 | |
| | **மொத்தம்** | | **921** |
| 02 | **ஒழுக்காற்று** | | |
| | குற்றப்பத்திரங்களை திருத்துதல் | 01 | |
| | ஏனைய ஒழுக்காற்று தண்டனைகள் | 04 | |
| | ஓ.பி.கு. 12 ஆம் பிரிவின் கீழ் ஓய்வுபெறுவித்தல் | 02 | |
| | ஒழுக்காற்று விசாரணை உத்தியோகத்தர்களை நியமித்தல் | 04 | |
| | ஏனைய பொதுவான கட்டளைகள் | 11 | |
| | **மொத்தம்** | | **22** |

**கல்விச் சேவைக்குழுவுக்கு ஏற்புடைய வழக்குகள் பற்றிய விபரம்**

- கல்விப் பணிப்பாளர் (விளையாட்டு மற்றும் உடற்கல்வி) பதவிக்கு நியமித்தல்.
  வழக்கு இலக்கம் SC(FR) 96/2017 – சட்டமா அதிபருக்கு ஏற்புடைய அவதானிப்புரைகள் அனுப்பப்பட்டுள்ளன.
- வடமேல் மாகாண கல்விப் பணிப்பாளரை நியமித்தல்.
  வழக்கு இலக்கம்SC(FR) 110/2017 –சட்டமா அதிபருக்குபதிலாள் பத்திரம் அனுப்பப்பட்டுள்ளது.

## VII. சுகாதார சேவைக்குழு

இல 2004/49 மற்றும் 2017.02.01 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் மற்றும் இல 2009/18 மற்றும் 2017.03.08 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் திருத்தப்பட்ட இல 1990/24 மற்றும் 2016.10.27 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் 2016 நவம்பர் மாதம் 01 ஆம் திகதியிலிருந்து செயற்படும் வண்ணம் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் சுகாதார சேவைக்குழுவுக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. இல 1990/25 மற்றும் 2017.10.271 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் 2016.10.27 முதல் அமுலுக்கு வரும் வகையில் சுகாதார சேவைக்குழுவுக்கு உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

### சுகாதார சேவைக்குழுவின் செயற்பாடுகள்

மேற்படி கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம்முன்வைக்கப்படும் விடயங்கள் தொடர்பாக தீர்மானங்களை எடுப்பது இக்குழுவின் கடமைப் பொறுப்பாகும்.

### சுகாதார சேவைக்குழுவின் முன்னேற்றம் (2017.04.01 ஆம் திகதி முதல் 2017.06.30 ஆம் திகதி வரை)

| தொ.இ | விடயம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | ஓய்வுபெறுகை | 74 |
| 02 | நிரந்தரமாக்கல் | 219 |
| 03 | 2017 ஆம் ஆண்டுக்கு முன்னர் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட இது வரையில் முறையான நியமிப்புக் கடிதம் வழங்கப்படாத மருத்துவ உத்தியோகத்தர்களுக்கு முறையான நியமிப்புக் கடிதங்களை வழங்குதல். | 173 |
| 04 | ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு | 24 |
| 05 | பதவி உயர்வு | 470 |
| 06 | விடுவித்தல் | 14 |
| 07 | இடமாற்றம் செய்தல் | 3056 |
| 08 | வினைத்திறன்காண் தடைத்தாண்டல் நிவாரணம் வழங்குதல் பற்றிய தீர்மானங்கள் | 126 |
| 09 | பதவி விலகல் | 03 |
| 10 | பதில் கடமை | 06 |
| 11 | பதவிகளுக்கு நியமித்தல் | 12 |
| 12 | நியமனங்களுடன் தொடர்புடைய ஏனைய கட்டளைகள் | 05 |
| 13 | குற்றப்பத்திரங்கள் வழங்குதல் | 05 |
| 14 | குற்றப்பத்திரங்களை திருத்துதல் | 03 |
| 15 | பணித்தடை செய்தல் | 01 |
| 16 | ஒழுக்காற்று நடவடிக்கையிலிருந்து விடுவித்தல் | 01 |
| 17 | ஏனைய ஒழுக்காற்று தண்டனைகள் | 02 |
| 18 | ஓ.பி.கு. 12 ஆம் பிரிவின் கீழ் ஓய்வுபெறுவித்தல் | 01 |
| 19 | மீண்டும் சேவையில் அமர்த்துதல் | 01 |
| 20 | முறையான ஒழுக்காற்று விசாரணைகளுக்காக உத்தியோகத்தர்களை நியமித்தல் | 13 |
| 21 | ஒழுக்காற்று நடவடிக்கைகளுடன் தொடர்புடைய ஏனைய கட்டளைகள் | 13 |
| | **மொத்தம்** | **4222** |

### சுகாதார சேவைக்குழுவுக்கு ஏற்புடைய வழக்குகள் பற்றிய விபரம்

மருத்துவ உத்தியோகத்தர் திருமதி ஆர்.எம்.பி.எம்.ரத்நாயக்க மீண்டும் சேவையில் அமர்த்தல் - வழக்கு இலக்கம் SC(FR) 365/2016– சட்டமா அதிபருக்கு ஏற்புடைய அவதானிப்புரைகள் அனுப்பப்பட்டுள்ளன.

**04. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயற்பாடுகளை மேலும் வினைத்திறனாக்குவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்.**

அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் சேவைப் பெறுநருக்கு வழங்கும் சேவையை மேலும் வினைத்திறனுள்ள மற்றும் பயனுள்ள விதத்தில் நிறைவேற்றுவதற்கு பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

__தாபனப் பிரிவு__

i. தாபனப் பிரிவின் செயற்பாடுகளை மேலும் வினைத்திறனாக்கும் பொருட்டு ஒவ்வொரு மாதமும் நினைவூட்டல் கடிதங்களை அனுப்புதல்.
ii. பிரச்சினைகளை கலந்துரையாடுவதற்கு ஏற்புடைய அமைச்சின் அந்தந்த விடயப் பரப்பில் தேர்ச்சிபெற்ற உத்தியோகத்தர்களை அழைத்து கலந்துரையாடல்களை நடாத்துதல்.
iii. பதில் கடிதங்களை அனுப்புவதற்கு தாமதிக்கும் அமைச்சுக்கள் / திணைக்களங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மூலம் அறிவித்து ஏற்புடைய தகவல்களை தொலைநகல் ஊடாக பெற்றுக்கொள்ளல்.

__நியமனப் பிரிவு__

i. அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை இல 01/2017 வெளியிட்டு பதவிகளுக்கு நிரந்தர அடிப்படையில் / பதில் கடமை அடிப்படையில் / கடமை நிறைவேற்றல் அடிப்படையில் உத்தியோகத்தர்களை நியமிக்கும் போது தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் முறை இலகுபடுத்தப்பட்டு முறைப்படுத்தப்பட்டது. அதற்கிணங்க அது வரையில் பயன்படுத்தப்பட்டு வந்த EST 10 மற்றும் EST 04 எனும் மாதிரிப் படிவங்களுக்கு பதிலாக EST 12 மாதிரிப் படிவம் அறிமுகப்படுத்தப்பட்டது. அதற்கிணங்க, நியமனப் பிரிவினால் மேற்கொள்ளப்படும் பதில் கடமை அடிப்படையில் / கடமை நிறைவேற்றல் அடிப்படையில் உத்தியோகத்தர்களின் நியமிப்பு நடவடிக்கைகளை மேலும் முறைப்படுத்த முடியுமாகியது.
ii. அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களிலிருந்து தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் போது ஏற்படும் தாமதத்தை தவிர்க்கும் பொருட்டும் சேவையை எதிர்பார்த்துள்ள அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு துரிதமான சேவையை வழங்கும் பொருட்டும் முறையான நினைவூட்டல்களை வழங்கி கடிதத் தொடர்புகளை குறைத்து கலந்துரையாடல்களை நடாத்துவதன் மூலம் நியமனப் பிரிவின் செயற்பாடுகளை வினைத்திறனாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
iii. குறிப்பிட்ட ஒரு காலப்பிரிவுக்குள் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைகளை பெற்றுக்கொள்ளும் பொருட்டு பிரிவின் சகல உத்தியோகத்தர்களுக்கும் இலக்கிடப்பட்ட காலவரையறைகள் வழங்கப்பட்டு முறையான நிகழ்ச்சித்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.
iv. உற்பத்தித்திறன் செயற்பாடுகளுக்கு இணைவாக பிரிவில் ''பிரபாதரனீ'' தர வட்டத்தை வினைத்திறனுடன் செயற்படுத்துவதன் மூலம் நியமனப் பிரிவின் செயற்பாடுகளை மேலும் வினைத்திறனாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

__பதவி உயர்வுப் பிரிவு__

i. உற்பத்தித்திறன் எண்ணக்கருக்கள் பிரிவில் நடைமுறைப்படுத்தி''அபிமன்'' தர வட்டத்தின் மூலம் சிந்தனை துாண்டுதல் ஊடாக பிரிவின் நடவடிக்கைகளை மறுசீரமைத்து பிரிவின் செயற்பாடுகளை மேலும் வினைத்திறனாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல்.
ii. அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களிலிருந்து தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் போது ஏற்படும் தாமதத்தை தவிர்க்கும் பொருட்டும் சேவையை எதிர்பார்த்துள்ள அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு துரிதமான சேவையை வழங்கும் பொருட்டும் முறையான நினைவூட்டல்களை வழங்கி கடிதத் தொடர்புகளை குறைத்து கலந்துரையாடல்களை நடாத்துவதன் மூலம் பதவியுயர்வுப் பிரிவின் செயற்பாடுகளை வினைத்திறனாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
iii. குறிப்பிட்ட ஒரு காலப்பிரிவுக்குள் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைகளை பெற்றுக்கொள்ளும் பொருட்டு பிரிவின் சகல உத்தியோகத்தர்களுக்கும் இலக்கிடப்பட்ட காலவரையறைகள் வழங்கப்பட்டு முறையான நிகழ்ச்சித்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

**ஒழுக்காற்றுப் பிரிவு**

i. உற்பத்தித்திறன் எண்ணக்கருவின் கீழான கருத்திட்டமொன்றாக ஆரம்பிக்கப்பட்ட முடிவுறாத ஒழுக்காற்று கோவைகளின் தகவல்களை தரவுத் தளத்தில் பதிவேற்றுதல்.
ii. ஒழுக்காற்று நடவடிக்கைகள் நிறைவுபெற்று பதிவேட்டறைக்கு அனுப்பப்பட்டுள்ள கோவைகள் மற்றும் அப்புறப்படுத்தப்பட்டுள்ள கோவைகளில் பேணிப் பாதுகாக்க வேண்டிய ஆவணங்களின் தகவல்களை தரவுத் தளமொன்றில் பதிவேற்றுதல்.
iii. நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுக்கொண்டிருக்கும் கோவைகளை விரைவாக தேடிப்பெற்றுக்கொள்வதற்காக பொருத்தமான முறையொன்றை இனம்காணல்.

**மேன்முறையீட்டுப் பிரிவு**

i. பிரிவுக்கு கிடைக்கப்பெறும் கோவைகளுக்கு அமைய அதிகாரங்கள் கையளிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களிடமிருந்து அவதானிப்புரைகள் / சிபாரிசுகள் மற்றும் அறிக்கைகளை துரிதமாகப் பெற்றுக்கொள்வதற்கு நினைவூட்டல் கடிதங்களை அனுப்புதல் மற்றும் அதனூடாக அமைச்சுச் செயலாளர்களை அறிவூட்டுதல்.

**கல்விச் சேவைக்குழு**

i. கோவை முகாமைத்துவ முறையொன்றை தயாரித்தல்.
ii. ஒழுக்காற்று நடவடிக்கைகள் தொடர்பாக முகாமைத்துவ முறையொன்றை தயாரித்தல்.
iii. வினைத்திறன்மிக்க பயனுள்ள சேவையை வழங்கும் பொருட்டு கடமைகளை நிறைவேற்றும் போது எழக்கூடிய பிரச்சினைகள் தொடர்பாக பிரிவின் உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடுதல்.
iv. சகல உத்தியோகத்தர்களினதும் பங்கேற்புடன் உடனடியாக நிறைவேற்ற வேண்டிய பணிகளை துரிதமாக மேற்கொள்வதது மற்றும் விடுமுறை நாட்களிலும் கடமைக்கு சமூகமளித்தல்.
v. அரச முகாமைத்துவ உதவி உத்தியோகத்தர்களுக்கிடையில் விடயங்களை மாற்றுவதன் மூலம் கடமைகளை சமநிலைப்படுத்தல்.

**சுகாதார சேவைக்குழு**

i. ஆவணங்களை முகாமைத்துவ கட்டமைப்பு முறையினுள் (DMS) சுகாதார சேவைக்குழுவுக்கென தனியான துறையொன்று ஒதுக்கப்படாத காரணத்தினால் சுகாதார சேவைக்குழுவினால் புதிதாக உருவாக்கப்பட்ட தகவல் தொகுதியொன்றை (ACCESS) மூலம் கடிதங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல்.
   கிடைக்கப்பெறும் கடிதங்களின் தகவல்களை இலகுவாக தேடிப்பெற்றுக்கொள்ள மாதிரிப் படிவமொன்றின் மூலம் 2017.04.25 ஆம் திகதியிலிருந்து நாளதுவரைப்படுத்தப்பட்டு வருகின்றது.
ii. சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவத்துறை அமைச்சின் கடிதங்கள் தொடர்பாக வினைத்திறனுடன் நடவடிக்கை எடுத்தல்.
   கிடைக்கப்பெறும் கடிதங்களில் காணப்படும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டவுடன் ஏற்புடைய உத்தியோகத்தர்களுடன் தொலைபேசி ஊடாக தொடர்புகொண்டு விடயங்களை கேட்டறிந்து அது தொடர்பாக குழுவுக்கு அறிவித்தல். மேலும் குழுவின் தீர்மானங்கள் தொடர்பாக நிறுவனத் தலைவர்களை தொலைமடல் ஊடாக அறிவூட்டுதல்.
iii. உத்தியோகத்தர்கள் இடமாற்றம் பெற்றுக்கொள்ளும் போதும் புதிய உத்தியோகத்தர்கள் நியமனம் பெறுகின்ற போதும் மிகவும் வினைத்திறனுடன் செயலாற்றுவதற்காக வேலை கையேடுகளை (Work Manuals) தயாரித்தல்.
iv. சுகாதார சேவைக் குழுவுக்கு குறிப்புக்கள் மூலம் விடயங்களை முன்வைத்தல். குழுவினால் வழங்கப்படும் கட்டளைகளை அறிவித்தல்மற்றும் பின்னூட்டல் செய்தல்.

5. அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுடனான கூட்டங்கள்

| தொ. இல | திகதி | விடயம் | பங்குபற்றிய அமைச்சு / திணைக்களம்/நிறுவனம் |
|---|---|---|---|
| 01 | 2017.04.06 | புகையிரத என்ஜின் சாரதிகளை விசேட தரத்திற்கு தரம் உயர்த்துதல். | போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவை அமைச்சு புகையிரத திணைக்களம் |
| 02 | 2017.05.02 | வினைத்திறன்காண் தடைதாண்டல் / மொழித் தேர்ச்சி என்பவற்றுக்கு நிவாரணங்கள் கோரல் | கமத்தொழில் அமைச்சு |
| 03 | 2017.05.05 | கட்டடக் கலைஞர் சேவை வகுப்பு 1 வெற்றிடங்களை நிரப்புதல் | அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு |
| 04 | 2017.05.05 | தேசிய விளையாட்டு கல்வி நிறுவனத்தின் மற்றும் விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் பதவிகளுக்கு நியமிக்கப்படும் போது எழுந்துள்ள பிரச்சினைகள் | விளையாட்டுத்துறை அமைச்சு விளையாட்டு அபிவிருத்தி திணைக்களம் தேசிய விளையாட்டு கல்வி நிறுவனம் |
| 05 | 2017.05.05 | இலங்கை மருத்துவ சேவையுடன் தொடர்புடைய பிரச்சினைகள் | சுகாதார,போசணை மற்றும் சுதேச மருத்துவத்துறை அமைச்சு |
| 06 | 2017.05.16 | ஆசிரிய கல்வியியலாளர் சேவை உத்தியோகத்தர்களின் பிரச்சினைகள் | கல்வி அமைச்சு |
| 07 | 2017.05.22 | நீர்பாசன மற்றும் நீர்வள முகாமைத்துவ அமைச்சின் இலங்கை தொழில்நுட்பவியல் சேவை உத்தியோகத்தர்களை விசேட தரத்திற்கு தரம்உயர்த்துதல் | நீர்பாசன மற்றும் நீர்வள முகாமைத்துவ அமைச்சு நீர்பாசனத் திணைக்களம் |
| 08 | 2017.05.22 | இலங்கை பொறியியல் சேவை தரம் III பதவிக்கு உத்தியோகத்தர்களை ஆட்சேர்த்தல்<br>இலங்கை கணக்காளர் சேவைக்கு உத்தியோகத்தர்களை ஆட்சேர்த்தல்<br>இலங்கை திட்டமிடல் சேவை தரம் III பதவிக்கு உத்தியோகத்தர்களை ஆட்சேர்த்தல் | அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு |
| 09 | 2017.05.22 | ஒன்றிணைந்த தபால் சேவையின் சிரேஷ்ட உத்தியோகத்தர்களின் சம்பள முரண்பாடுகள் | அஞ்சல்,அஞ்சல் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய கலாசார அலுவல்கள் அமைச்சு |
| 10 | 2017.05.23 | அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவை தொடர்பான பிரச்சினைகள் | அரசாங்க நிர்வாக மற்றும்ம் முகாமைத்துவ அமைச்சு |
| 11 | 2017.05.24 | வினைத்திறன்காண் தடைதாண்டலை பூர்த்தி செய்வதற்கு நிவாரணம் வழங்குதல் | சமூக சேவைகள் திணைக்களம் |
| 12 | 2017.05.25 | தொல்பொருளியல் திணைக்களத்தின் MN – 05 ஆட்சேர்ப்புத் திட்டம் தொடர்பான பிரச்சினைகள் | கல்வி அமைச்சு தொல்பொருளியல் திணைக்களம் |
| 13 | 2017.05.26 | சமூக மருத்துவ தகைமைகள் கொண்டுள்ள உத்தியோகத்தர்களை மருத்துவ நிர்வாக தரத்திற்கு நியமிப்பதன் மூலம் எழுந்துள்ள பிரச்சினைகள் | இலங்கை சமூக மருத்துவ பயிற்சிப் பாடசாலை |
| 14 | 2017.05.30 | அரசாங்க சட்டவாதிகள் தகுதிகூர்நிலைக் காலப்பகுதிக்குள் பெற்றுக்கொண்ட வெளிநாட்டு விடுமுறைகள் தொடர்பாக மேலதிக விளக்கம் கோரல் தொடர்பாக | நீதி அமைச்சு |
| 15 | 2017.06.02 | மருத்துவ நிர்வாக தகைமைகள் கொண்டுள்ள உத்தியோகத்தர்களை மருத்துவ நிர்வாக தரத்திற்கு நியமிப்பதன் மூலம் எழுந்துள்ள பிரச்சினைகள் | இலங்கை மருத்துவ நிர்வாக கல்லூரி |
| 16 | 2017.06.02 | மருத்துவ சேவைக்கான குறைநிரப்பி தொழிற் சேவைக்கு மற்றும் துணை மருத்துவ சேவைக்கும் உரிய பதவிகளுக்கு பயிற்சிப் பாடசாலைகளின் சிரேஷ்ட விரிவுரையாளர்கள் மற்றும் அதிபர்களை ஆட்சேர்க்கும் போது எழுந்துள்ள பிரச்சினைகள் | சுகாதார, போசணை மற்றும் சுதேச மருத்துவத்துறை அமைச்சு |
| 17 | 2017.06.12 | புகையிரத சாரதி அதி உயர் தரத்திற்கு பதவி உயர்வு வழங்குதல் | போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவை அமைச்சு/ புகையிரத திணைக்களம் |
| 18 | 2017.06.20 | சிங்கள அகராதி அலுவலகத்தின் உதவி ஆசிரியர் பதவி வகிக்கும் உத்தியோகத்தர்களை தரம் II க்கு பதவி உயர்த்துதல் | உள்ளக அலுவல்கள், வடமேல் மாகாண அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு |
| 19 | 2017.06.29 | புகையிரத திணைக்களத்தின் ஆட்சேர்ப்புத் திட்டம் மற்றும் ஏனைய பிரச்சினைகள் | போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவை அமைச்சு<br><br>புகையிரத திணைக்களம் |

| | | | |
|---|---|---|---|
| 20 | 2017.06.29 | புகையிரத என்ஜின் சாரதிகளை விசேட தரத்திற்கு தரம் உயர்த்துதல். | போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவை அமைச்சு புகையிரத திணைக்களம் |
| 21 | 2017.06.29 | விவசாய சேவையின் 1 மற்றும் விசேட தரத்தின் பதவிகளுக்கு நியமித்தல் தொடர்பானவை | கமத்தொழில் அமைச்சு/ விவசாயத் திணைக்களம் |

**06. பொதுமனுக்குழுவில் ஆஜராகுதல்**

2017.04.01 ஆம் திகதி முதல் 2017.06.30 ஆம் திகதி வரை ஆஜராகிய பொதுமனுக்குழு விசாரணைகளின் எண்ணிக்கை 10 ஆகும்.

**07. அரசாங்கத்திற்கு எதிரான நீதிமன்ற வழக்குகளை மீளப்பெறல்.**

மீளாய்வுக்குரிய காலப்பகுதியில் அரசாங்கத்திற்கு எதிராக நீதிமன்றில் தொடுக்கப்பட்ட வழக்குகளில் மீளப்பெறப்பட்டவைகளின் எண்ணிக்கை 02 ஆகும்.

-------------------------------//----------------------------